197

உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 3. Vol. 3. | வெகுதான்ய ஹு ஐப்பசி மீ அக்டோபர்—1938 | இதழ் 7. No. 7.

திருப்புகழ்

பழநி—(திருவாவினன்குடி)

தகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழிவலை படவிதி
தலையி லெழுதியு மனைவயி னுறவிடு வதனாலே
தனயர் அனைதமர் மனைவியர் சிநேகிதர்
சுரபி விரவிய வகையென நினைவுறு
தனை சலதியின் முழுகியே யிடர்படு துயர்தீர
அகர முதலுள பொருளினை யருளிட
இருகை குவிசெய்து ளுருகிட வுருகியே
அரக ரெனவல னிடமுற எழிலுன திருபாதம்
அருள அருளுடன் மருளற இருளற
கிரண அயில்கொடு குருகணி கொடியொடு
அழகு பெறமர கதமயில் மிசைவர இசைவாயே
சிகர குடையினி னிரைவர இசைதேரி
சதுரன் விதுரனில் வருபவ னளையது
திருடி யடிபடு சிறியவ னெடியவன் மதுசூதன்
திகிரி வளைகதை வசிதனு வுடையவ
னெழிலி வடிவின னரவுபொன் முடிமிசை
திமித திமிதிமி யெனநட மிடுமரி மருகோனே

பகர புகர்முக மதகரி யுழைதரு
வனிதை வெருவமுன் வரஅருள் புரிகுக
பரம குருபர இமகிரி தருமயில் புதல்வோனே
பலவின் முதுபழம் விழைவுசெய் தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடர் பொழில்திகழ்
பழநி மலை வரு புரவல அமரர்கள் பெருமாளே.

பதவுரை.

சிகர குடையினில் நிரை வர இசைதெரி சதுரன் - கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப்பிடித்தபோது (மழைக்காற்றுத) பசுக்கூட்டங்கள் அக்குடையின்கீழ் தானேவந்து சேருமாறு புல்லாங்குழலையூதிய சாமார்த்தியமுடையவரும், விதுரன் இல் வருபவன் - (சுயோதனன்பால் தூதுசென்றபோது) மெய்யன்புபூண்ட விதுரனுடைய மாளிகைக்கு உணவுகொள்ளச் சென்றவரும், அனையது திருடி அடிபடு சிறியவன் - (கோபிகைகள் வீட்டில்) வெண்ணெயைத்திருடி அவர்களால் அடிபட்ட இளம்பருவத்தையுடையவரும், நெடியவன் - (மாபலிபால் மூவடிகேட்டு உலகை ஓரடியால் அளக்க) நீண்ட வடிவத்தைக் கொண்டவரும், மதுசூதன் - மது என்கின்ற அரக்கனை வதைத்தவரும், திகிரி - சக்கரத்தையும், வளை - சங்கையும், கதை - கதாயுதத்தையும், வசி - வாளாயுதத்தையும், தனு - வில்லையும், உடையவன் - இந்த ஐம்படைகளையுடையவரும், எழிலி வடிவினன் - நீலமேகம்போன்ற திருமேனியை யுடையவரும், அரவுபொன் முடிமிசை - காளிங்தி என்னும் பாம்பினுடைய அழகிய பணமகுடத்தின் மீது நின்று, திமித திமிதிமி என நடமிடும் அரி - திமித திமிதிமி என்ற ஒலியுடன் திருநடனம்புரிந்தவரும் பாவத்தை நீக்குபவருமாகிய நாராயணமூர்த்தியினது, மருகோனே - மருகரே!, உழை தரு வனிதைமுன் - மான் வயிற்றிற் பிறந்த வள்ளிநாயகியாரது திருமுன், பகர பு ர்முக மதகரி வர - ஒளியுடையதும் கபில நிறத்துடன் கூடியதுமான முகத்தையுடைய மதங்களைப் பொழியும் யானையை வருமாறு செய்து, அருள் புரிகுக - திருவருள்செய்த குகமூர்த்தியே, பரம - பெரிய பொருளே!, குருபர - ஞானப்பொருளை உபதேசிக்க வல்ல பெரிய குருமூர்த்தியே!, இமகிரிதருமயில் புதல்வோனே - பருப்பத வேந்தனுகிய பனிமலை பெற்றெடுத்த பச்சை மயில்போன்ற

சாயலையுடைய பார்வதி தேவியாருடைய திருக்குமாரரே !, பலவின் முதுபழம் விழைவுசெய்து ஒழுகிய நறவு நிறைவயல் - பலாமரத்தில் முற்றிய பழங்களினின்றும் கண்டோர் விரும்புமாறு ஒழுகிய தேன் நிரம்பப்பெற்ற வயல்களும், கமுகு அடர்பொழில் திகழ் - பாக்குமரங்கள் நெருங்கிய சோலைகளும் சூழ்ந்து விளங்குகின்ற, பழநிமலை வரு புரவல - பழநிமலையின்மேல் எழுந்தருளியுள்ள எப்பொருட்கும் இறைவரே !, அமரர்கள் பெருமாளே !, தேவர்களுக்குத் தலைவராகிய பெருமையுடையவரே !, தகர நறுமலர் பொதுளிய குழலியர் - தகரமரத்தின் வாசனைபொருந்திய மலர்களைச் சூடிக்கொண்டுள்ள கூந்தலையுடைய பொது மாதர்களது, கலக கெருவித விழிவலைபட விதி தலையில் எழுதி — ஆடவர்கள் கலகத்தை விளைவித்துக்கொள்ளக் கூடியதும் செருக்குடையதுமாகிய கண்வலையிற்பட்டுழலும்வண்ணம் பிரமன் அடியேன் தலையில் விதித்தெழுதி, அனைவயின் உறவிடு வதனாலே - தாயாருடைய வயிற்றில் கருவடையுமாறு விடுவதனால், தனயர் - குழந்தைகள், அனை - தாயார், தமர் - சுற்றத்தார், மனைவியர் - மனைவிமார்கள், சிநேகிதர் - நண்பர்கள், சுரபி - பசுக்கள், விரவிய வகையென நினைவுறு - இவைமுதலாகக் கலந்துள்ள பொருள்களின் வகைகளை நினைந்து நினைந்து (அவற்றின்மீது மிகவும் ஆசைகொண்டு), தவன சலதியில் முழுகியெ இடர்படு துயர்தீர - ஆசைக் கடலில் மூழ்கி மிகுந்த துன்பத்தையனுபவிக்கும் துயர் தீருமாறு, அகர முதலுள பொருளினை அருளிட - அகரத்தை முதலெழுத்தாகவுடைய பிரணவமந்திரத்தின் பொருளை உபதேசித்தருள்புரியவும், இருகை குவிசெய்து உள் உருகிட — இரண்டு கரங்களையுங் கூப்பி அடியேன் உருகவும், உருகியெ அரகர என வலன் இடமுற - அவ்வாறு அடியேன் உருகி அரகர என்று துதிசெய்து வலம் இடமாக வந்து வழிபடவும், எழில் உனது இருபாதம் அருள - அழகிய தேவரீரது திருவடிகளை அடியேனுக்குத் தந்து அருள்புரியவும், மருள் அற - உலக பசுபாச தொந்தத்தால் உண்டாகும் மயக்கம் நீங்கவும், இருளற - அஞ்ஞான இருள் நீங்கவும், கிரண அயில்கொடு குருகு அணி கொடியொடு - ஞான ஒளியை வீசும் வேலாயுதத்தைக் கரத்தில் தாங்கிக் கொண்டு அழகிய சேவற்கொடியோடும், அழகுபெற - மிகுந்த அழகுடன், அருளுடன் - திருவருளோடு, மாகதமயில் மிசை வர இசைவாயே - மரகதநிறத்தையுடைய பச்சை மயில்மேல்வந்து அருள் செய்யத் திருவுளம்பற்றவேண்டும்.

பொழிப்புரை.

(மழையின் கொடுமையால் பசுக்கள் வெருவி நாற்புறமும் ஓடிய போது) கோவர்த்தனகிரியை எடுத்துக் குடையாகப்பிடித்து அக் குடையின்கீழ் பசுக்கள் வந்துசேர வேணுகானஞ்செய்த சாமர்த்திய முடையவரும், தூதுபோனபோது தம்மிடத்துப் போன்புடைய விதுரர் திருமாளிகைக்கு விருந்தாகச் சென்றவரும், கோபிகைக்கள் வீடுகள்தோறும் வெண்ணெயைத்திருடி அவரால் அடிபட்டவரும், பாலகிருஷ்ணரும், படிமாவலிபால் மூவடிகேட்டு மூதண்டகூட முகடு முட்ட சேவடி நீட்டியளக்கப் பேருருக்கொண்டவரும், மது என்னும் அசுரனையழித்தவரும், சங்க சக்ர கதை வில் வாள் என்னும் ஐம் பெரும்படைகளைத் தரித்தவரும், நீலமேகவண்ணரும், காளிந்தி என் னும் பணியரசனுடைய அழகிய பணமுடியின்மீது நின்று திமித திமிதிமி என்ற தாளஒத்துடன் திருநடனமிட் டருளியவரும், பாவத்தை நீக்குபவருமாகிய நாராயணமூர்த்தியின் மருகரே!, மான் மகளாகிய வள்ளியம்மையார் அச்சப்பட அவர்முன் ஒளியுடையதும் கபிலநிறமுடையதுமாகிய முகத்தோடுகூடிய மதயானையை வருமாறு செய்து அருள்புரிந்த குகப்பெருமானே! பெரியபொருளே!, குரு பர! பனிமாமலைக்காசுதந்த பார்வதிதேவியாரது திருக்குமாரரே!, முதிர்ந்த பலாப்பழங்களின் சாறு காண்போர் விரும்புமாறு பெருகி நிரம்பிய வயல்களும் நெருங்கிய கமுகு சோலைகளுஞ்சூழ்ந்த பழநி மலைமீது எழுந்தருளியுள்ள தனிப்பெருந் தலைவரே! தேவர்கள் பெரு மானே!, தகரமாத்தின் மணம்வீசும் மலர்களைமுடித்துள்ள கூந்தலை யுடைய விலைமகளிரது கலகத்தைச்செய்யும் செருக்குடன்கூடிய கண் வலையிற்பட்டுழலுமாறு அடியேனுடைய தலையில் பிரமன் எழுதி, தாய் வயிற்றில் விடுவதனல், அடியேன் மக்கள் தாய் சுற்றம் மனைவியர் நண்பர் பசுமுதலிய பொருள்களின்மீது மிகவும் பற்றுடையவனுகி அவற்றையே நினைந்து ஆசைக்கடலில்மூழ்கி இடர்படுகின்ற இன்னல் நீங்குமாறு, அகார எழுத்தை முதலாகவுடைய குடிலைமந்திரப்பொருளை உபதேசிக்கவும், அடியேன் இருகரங்களையும் குவித்து உள்ளம் அழ லிடைமெழுகேபோல் உருகவும், அங்ஙனம் உருகி "அரகர" என்று துதித்து வலம் இடமாகவந்து வழிபடவும், தேவரீருடைய அழகிய சரணகமலத்தை அடியேனுக்குத் தந்தருளவும், உலக பசுபாசதொந் தத்தால் வருகின்ற மயக்கம் நீங்கவும், அஞ்ஞான இருள் நீங்கவும், ஞான ஒளியையுடைய வடிவேலைக் கரத்தில் ஏந்தி அழகிய சேவற்

201
Roll-121
1264
18551

கொடியுடனும், மிகுந்த அழகுடனும் அருளுடனும், மாகதமயில்மிசை வந்து அருள்செய்ய இசையவேண்டும்.

விரிவுரை.

தகர :—

வாசனை பொருந்திய ஒரு வாசனைமரம்.

கலககெருவித விழிவலை :—

கண்பார்வையால் ஒருவருக்கொருவர் விரோதித்து கலகமிடக் கூடியதும் செருக்குடையதுமாகிய விழியாகிய வலையை வீசி விலை மாதர் இளம்பருவத்தையுடைய ஆடவரைப்பிடிப்பர்.

தவன சலதி :—

ஆசைக்கடல்; இதில் வீழ்ந்தோர் கரைகாணாது துன்புறுவர். மனைவி மைந்தர் நண்பர் மாடு பொன் என்னும் பல அலைகளையுடையது இவ்வாசைப் பெருங்கடல். ஓயாது எண்ணங்களாகிய நுரைகளையுடையது; அறியாமையாகிய கருமை நிறத்துடன் கூடியது. நாகமாகிய பயங்கரத்தை யுண்டாக்குவது.

அகர முதலுள பொருள் :—

அகர உகர மகர என்னும் மூன்றெழுத்துக்களுங் கூடியது பிரணவ மந்திரமாதலால் அகரமுதலுள பொருள் என்றார். அகாரம் சிருஷ்டியையும், உகாரம் திதியையும், மகாரம் சங்காரத்தையும் செய்யுமாதலால் சிருஷ்டி திதி சங்காரமாகிய முத்தொழில்களும் அப்பிரணவ மந்திரத்தாலேயே நிகழ்கின்றன. அத்தனிமொழிக்கு முதல்வன் முருகவேளேயாம். அப்பெருமான் ஒருவனே அவ்வொருமொழிக்குப் பொருள்கூறவல்லான். சிவபெருமானும் அம்மொழியின் பொருளை அக்குகமூர்த்தியின்பால் கேட்டனரன்றோ? ஆதலால் பிரணவோபதேச கர்த்தராகிய முருகப்பெருமானை உபதேசிக்குமாறு வேண்டுகிறார். அப்பெருமானைக்குருவாகக் கொண்டுணராதார் அம்மெய்ப் பொருளை யுணரமாட்டார் என்பதனை அடியில்வரும் அனுபூதியில் அருள்வாக்காலறிக,

"முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கோண் டறியா ரறியுந் தரமோ"

குருகணி கொடியோடு :—

பெருமான் வருகையை ஒலியால் முன்னரே உணர்த்தி மகிழச் செய்வதால் அச்சேவற்கொடியுடன் வரவேண்டும் என்றார்.

"சென்றே யிடங்கள் கந்தா வெனும்போ
செஞ் சேவல் கொண்டு வரவேணும்"

சிகர குடையினில் நிரைவர இசைதெரி சதுரன் :—

கோவர்த்தன கிரியை குடையாகப்பிடித்த வரலாறு.

நந்தகோபர் உபநந்தர் முதலிய ஆயர்குலத்தலைவர்கள் ஒரு நாள் ஆண்டுகள்தோறும் நடத்திக்கொண்டுவந்த மகேந்திர யாகத்தைச் செய்ய ஆலோசித்து தொடங்கினர்கள். அதனையறிந்த கண்ணபிரான் அந்த யாகவரலாற்றை யறிந்திருந்தும் அறியாதவரைப்போல், தமது பிதாவாகிய நந்தகோபரைப்பார்த்து, "எந்தையே! இந்த யாகம் யாரைக்குறித்துச் செய்கிறீர்கள்? இதனால் அடையப்போகும் பயன் யாது? இந்த யாகத்தால் உண்டாகும் பயன்என்ன?" என்று வினவினர். நந்தகோபர், "குழந்தாய்! தேவர்களுக்கு அதிபதியான இந்திரன் மேகரூபமாயிருந்து உயிர்களுக்கு பிழைப்பையும் சுகத்தையும் தருகின்ற தண்ணீரைப்பொழிகின்றான்; மூன்று உலகங்களுக்கும் தலைவனாகிய அந்த இந்திரனது ஆணையால் இந்தமேகங்கள் சகல ஜீவாதாரமாவுள்ள மழையைப் பெய்கின்றன; ஆதலால் இந்த மேக வாகனனாயிருக்கும் இந்திரனைக்குறித்து ஆண்டுகள்தோறும் ஒருநாளை ஏற்படுத்திக்கொண்டு பரிசுத்தர்களாயிருந்து, சிறந்த பால் தயிர் அன்னம் முதலிய பொருள்களைக்கொண்டு இந்த இந்திரயாகத்தைச்செய்து இந்திரபகவானை ஆராதிக்கின்றோம்; கமலக்கண்ணா! இவ்வாறு இந்திரனைப்பூசித்தவர்கள் இந்திரனுடைய அருளால் எல்லா நலன்களையும் பெற்று இன்புறுகின்றார்கள்; மேலும் அந்தப்பர்ஜன்யரூபியாகிய இந்திரன் அநேக நற்பலன்களை வழங்குகின்றான்; இவ்வாறு ஆராதிக்காதவர்கள் நன்மையையடையமாட்டார்கள்" என்றார்.

மூன்றுலகத்திற்கும் முதல்வன் என்று செருக்குற்ற இந்திரனுடைய அகங்காரத்தை நீக்கத் திருவுளங்கொண்ட கண்ணபிரான் பிதாவை நோக்கி, "தந்தையே! உயிர்கள் வினைகளுக்கீடாய்ப் பிறக்கின்றன; முற்பிறப்புக்களிற் செய்த வினைகளின்வண்ணம் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி சுகதுக்கங்களை யனுபவிக்கின்றன; வினைகளால்தான் சுகதுக்கங்கள் வருகின்றன; இதனையன்றி இந்திராதி உலக பாலகர்கள் பலன்களைக் கொடுக்க வல்லவராகமாட்டார்கள். இந்திரனால் ஒருபலனும் கொடுக்கமுடியாது; கர்மத்தை யொழிக்கும் ஆற்றலுமில்லை; உயிர்கள் தாங்கள்செய்த வினைக்குத்தக்கவாறு பசு பட்சி புழு விலங்கு தேவர் மனிதர்களாகப் பிறந்து சுகதுக்கங்களை

யனுபவிக்கின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை; சுகதுக்கத்திற்கு கர்மமே முக்கிய காரணம்; நம்முடைய புண்ணியமே மேகமாக இருந்து மழை பெய்கின்றன; எந்தையே! நமக்கு ஊர்கள் தேசங்கள் வீடுகள் ஒன்றுமில்லை; காடுமலைகளில் வசித்துக்கொண்டு காட்டுப் பிராணிகள்போல் பிழைத்துவருகின்றோம்; ஆதலால் இந்த மலையையும் மலைக்கு அதிதேவதையையும் பசுக்களையும் பூசியுங்கள்; இப்போது இந்திரபூசைக்காகச் சேகரித்த பொருள்களைக்கொண்டு இந்த மலையை ஆராதியுங்கள்; பற்பல பணியாரங்கள் பாயசம் பால் நெய் பருப்பு அப்பம் இவைகளைத்தயாரித்து அந்தணர் முதல் சண்டாளர் நாய்வரை எல்லாப்பிராணிகளையுந் திருப்திசெய்துவையுங்கள்; பசுக்களுக்குப் புல்லைக்கொடுங்கள்; பிறகு நீங்கள் அனைவரும் புசித்து சந்தனுதி வாசனைகளையணிந்து ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு இந்த மலையை வலம்வந்து வணங்குங்கள்" என்றார்.

இதனைக்கேட்ட கோபாலர்கள் அனைவரும் "நன்று" என்று அதற்கு இசைந்து, கோவர்த்தனமலைக்கருகில் இருந்து அம்மலையை வழிபட முயன்றார்கள். அப்போது பகவானுகிய கண்ணபிரான் தனது யோகமகிமையால் தாமே ஒரு பெரிய மலையாக நின்றார். அவ்வாயர்களிலும் தாமொருவராக இருந்து, "ஆயர்களே! இதோ இந்த மலைக்கு அதிதேவதையே நம்மைக் காக்கும்பொருட்டு இங்கு எழுந்தருளியிருக்கிறார்; இவரை நீங்கள் அன்புடன் ஆராதியுங்கள்" என்றார். ஆயர்கள் அதனைக்கண்டு மிகுந்த ஆச்சரியமடைந்து, பயபக்தி சிரத்தையுடன், அருக்கியபாத்திய ஆசமனீயந்தந்து, மனோபாவமாக அபிஷேகஞ்செய்து, சந்தன புஷ்பமாலைகளைச்சாத்தி, தூபதீபங்களைக் காட்டி, அர்ச்சித்து, டங்கா பேரி வேணு முரசு முதலிய வாத்தியங்களை முழக்கி, பால் நெய் பருப்பு அன்னம் பழம் தாம்பூலம் முதலியவற்றை நிவேதித்து வழிபட்டார்கள். மலைவடிவாயுள்ள பகவான் அவைகளைப்புசித்து அருள்புரிந்தார். கண்ணபிரானும் ஆயர்களுடன் அம்மலையை வணங்கி, "நம்மவர்களே! இதோ மலைவடிவாயுள்ள தேவதை நாம் நிவேதித்தவைகளையுண்டு நமது பூசையை ஏற்றுக் கொண்டார்; இம்மலை நம்மைக் காத்தருள்புரியும்" என்று கூறினார். கோபாலர்கள் மகிழ்ந்து மலையை வலம்வந்துவணங்கி துதித்துநின்றார்கள். பிறகு அம்மலைவடிவாகநின்ற பகவான் மறைந்தார். ஆயர்கள் கோவர்த்தனம் முதலிய மலைகட்கு தூபதீபங்காட்டி ஆராதித்து வணங்கி, பசுக்களையலங்கரித்து தாங்களும் உணவுகொண்டு அலங்கரித்துக்கொண்டு மலையை வலம்வந்து மகிழ்ந்தார்கள்.

ஆயர்கள் வழக்கமாய்ச் செய்துவந்த பூஜையை மாற்றியதைக் கண்ட இந்திரன் மிகவும் கோபித்து, ஊழிக்கால மேகங்களை அழைத்து, "மேகங்களே! இளம்பிள்ளையும் தன்னையே பெரிதாக மதித்திருக்கின்றவனுமாகிய இந்தக்கிருஷ்ணனுடைய வார்த்தையைக் கேட்டு, மூவுலகங்கட்கும் முதல்வனாகிய என்னை இந்த ஆயர்கள் அவமதித்தார்கள்; புத்திகெட்டு கேவலம் இந்த மலையை ஆராதித்தார்கள்; ஆதலால் நீங்கள் உடனே இந்தக் கிருஷ்ணனையும் ஆயர்களையும் பசுக்களையும் வெள்ளத்திலழித்து கடலிற்சேர்ந்தழியுமாறு பெருமழையை இடைவிடாது பொழியுங்கள்" என்று ஆணைதந்தான். இவ்வாறு கட்டளையிட்ட இந்திரன் தானும் ஐராவதத்தின்மேலூர்ந்து தேவர்கள் சூழ ஆயுதங்களை ஏந்திக்கொண்டு சண்டவாயுக்களை மேகங்களுக்குச் சகாயமாக ஏவினான். மேகங்கள் ஊழிகாலமென உலகங்கள்வருந்த ஆரவாரத்துடன் ஆகாயத்தில் வியாபித்து, மின்னல் இடியுடன் சுழல் காற்றுடன் எங்கும் இருளையுண்டாக்கிக் கல்மழையை ஆயர்பாடியின் மீது பெய்தன. அப்பெருமழையால் எங்கும் தண்ணீர்மயமாகியது; பசுக்கூட்டங்கள் பதறியோடின; கன்றுகள் பயந்து தாய்ப்பசுக்களைச் சரண்புகுந்தன; எருதுகளும் இரிந்தன; இடையர் இந்த பெரிய ஆபத்தைக்கேட்டு "பிரமாண்டங் கிழிந்துபோயிற்றோ? ஊழிகாலம் வந்துவிட்டதோ?" என்று நடுநடுங்கி கண்ணபிரானிடம் ஓடிவந்து, "கண்ணா! மணிவண்ணா!" என்று முறையிட்டு சரணாகதியடைந்தார்கள். கண்ணபிரான், "ஜனங்களே! கல்மழைக்கு அஞ்சவேண்டாம்; குழந்தைகளுடனும் பசுக்களுடன் உங்கள் பெண்மணிகளுடன் வாருங்கள் பகவான் காப்பாற்றுவார்" என்று சொல்லி பெரிய மலையாகிய கோவர்த்தனத்தைத் தூக்கி, ஒரு சிறுபிள்ளை மழைக்காலத்தி லுண்டாகும் காளானைப் பிடுங்கிக் குடையாகப் பிடிப்பதுபோல் ஒரு கரத்தால் பிடித்தார். வராகமூர்த்தியாகி பூமண்டலத்தை ஒரு கோட்டால் தாங்கிய பெருமானுக்கு இது பெரியகாரியமோ? ஒரு யானையின் தும்பிக்கையில் ஒரு தாமரைமொக்கு இருப்பதுபோல், பகவான் கரத்தில் அம்மலையானது விளங்கியது. கண்ணபிரான், "நம்மவர்களே! இம்மலையின்கீழ் யாதொரு குறைவுமின்றி நீங்கள் எல்லீரும் வந்து சுகித்திருங்கள்; இந்த மலை விழுந்துவிடுமென்று நீங்கள் அஞ்சவேண்டாம; பிரமாண்டங்கள் இடிந்து இம்மலைமேல் விழுந்தாலும் இது விழாது" என்று அருளிச்செய்தார். அதுகண்ட ஆயர்கள் அற்புதமடைந்து கோவினங்களுடன் மனைவி மக்களுடன் அம்மலையின்கீழ் சுகமாயிருந்து மழைத்துன்பமின்றி பாடியாடிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு அந்த ஊழிமேகங்கள் ஏழுநாள் இரவும் பகலும் பெரு மழையைப் பெய்தும் கோபாலர்கள் துன்பின்றி இருக்கக்கண்ட இந்திரன் கண்ணபிரானுடைய மகிமையையுணர்ந்து பயந்து, மேகங்களை யனுப்பிவிட்டு பெருமானைச் சரணமடைந்தான். மழை நின்றபிறகு ஆயர்களைத் தத்தம் இருக்கைக்குச் செல்லுமாறு செய்து அம்மலையை பழையபடியே வைத்தனர்.

அம்மைத் தடங்கண் மடவாய்ச்சியரு
மானு யருமா நிரையு மலறி
எம்மைச் சரணென்று கொள்ளென் றிரப்ப
இலங்கா ழிக்கை எந்தை எடுத்தமலை
தம்மைச் சரணென்ற தம்பாவையரைப்
புனமேய்கின்ற மானினங் காண்மி னென்று
கொம்மைப் புயக்குன்றர் சிலை குனிக்கும்
கோவர்த்தன மென்னும் கொற்றக் குடையே.

—பெரியாழ்வார்.

விதுரனில் வருபவன் :—

பூபாரம் தீர்க்கப்புகுந்த புயல்வண்ணராகிய கண்ணபிரான் பாண்டவர்கள் தூதனுகச் சதுரங்கசேனைகள் சூழ அத்தினபுரத்திற்குச் சென்றார். அவருடைய வருகையையுணர்ந்து துரியோதனனைத்தவிர ஏனைய திருதராட்டிர புதல்வர்களும், பீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்களும் நன்கு அலங்கரித்துக்கொண்டு பகவானை எதிர் கொண்டார்கள். நகரத்து ஜனங்கள் கமலக்கண்ணனைக் காணவேண்டுமென்று விரும்பி வாகனங்களிலும் நடந்தும் வந்து எதிர்கொண்டார்கள். பகவான் தன்னை எதிர்கொண்ட பீஷ்மதுரோணர்முதலியோர் சூழ நகரவீதியிற் சென்றார். அவரை மகிழ்விப்பதற்காக நகரத்தை நன்கு அலங்கரித்தும் வழிகளில் இரத்தினங்களை இழைத்துமிருந்தன. பெருமானைக் காணவேண்டி வீட்டில் எழுதிய சித்திரங்களைத்தவிர மற்ற எல்லா ஜனங்களும் மார்க்கத்தில் குழுமி பூமியில்நின்று துதித்தார்கள். பகவான் கூட்டத்தின்மிகுதியால் மெல்லத் தேரைநடத்தி திருதராஷ்டிரனுடைய பொன்மாளிகையைச் சேர்ந்தார். பகவான் வருகையையுணர்ந்து திருதராஷ்டிரன் எழுந்து உபசரித்தான். கிருபர் பாகுலிகர், சோமதத்தர், முதலிய எல்லோரும் பகவானை வரவேற்று உபசரித்தார். திருதராஷ்டிரன் அனுமதியின்மேல் பகவான் பொற்றவிசில் எழுந்தருளியிருந்தார்.

பிறகு, அத்தையாகிய பிரதையைப்பார்த்துவிட்டு துரியோதன னுடைய பெரிய அரண்மனைக்குச்சென்றார். கொடுமுடிபோலுயர்ந்த மேல்மாடியில் ஏறினார். அங்கு ஆயிரம் அரசர்கள்சூழ யிருந்த துரி யோதனனைக்கண்டார். துரியோதனன் துர்ச்சாசனன் சகுனிமுதலி யோருடன் எழுந்துவரவேற்றான் கண்ணன் அவர்களுடன் தகு திக்குத்தக்கவாறு பேசினார். பகவானுக்காகச் சிறந்த உணவுகளைத் தயாரித்து விருந்துக்கு அழைத்தான். வாசுதேவர், "துரியோதனா! நான் பாண்டவர்தூதனாக வந்திருக்கிறேன்; தூதர்கள் காரியம் முடி யாமுன் புசிப்பதில்லை; நீ பாண்டவர்களைப் பகைக்கின்றாய்; பாண்ட வர்கள் என்னுடைய பிராணன்கள்; அவர்களைப் பகைத்தவர்கள் என்னைப் பகைத்தவர்களே; அவர்களை நேசிக்கின்றவன் என்னை நேசிப்பவனே; எவன் ஆசையையும் கோபத்தையும்கொண்டு குண வானை விரோதிக்கிறானோ அவனுடைய அன்னம் உண்ணத்தக்க தன்று; மனத்தையும் கோபத்தையும் ஜெயிக்காமல் எந்த அதமன் நற் குணமுள்ள ஞாதிகளை (தாயாதிகளை) பகைக்கிறானோ அவன் வெகு காலம் செல்வத்துடன் நிலைத்திருக்கமாட்டான்; அவனுடைய அன்ன மும் புசிக்கத்தக்கதன்று; விதுரருடைய அன்னம் ஒன்றே புசிக்கத் தக்கது; என்று கூறிவிட்டு தம்மிடத்து மெய்யன்புபூண்ட விதுரர் வாழும் திருமாளிகைக்கு எழுந்தருளினார். துரோண பீஷ்மாதிபெரி யோர்கள் வீட்டிற்குச் சென்றாரில்லை.

விதுரர் பகவானை எதிர்கொண்டு மணித்தவிசு நல்கி வாயார வாழ்த்தி உபசரித்தார். தவம்புரியும் முனிபுங்கவர்க்கும் எளிதிற் கிடைக்காத பெருமான் தன்வீட்டில் வலியவந்ததை எண்ணி உடல் புளகித்து கண்ணீர்சொரிந்து கைகுவித்துத் துதிப்பாராயினார்.

இருந்து வந்தரு ளினறவனை யிறைஞ்சின னிறைஞ்சிப்
பொருந்து வந்தனைப் பிறப்பையு மிறப்பையும் பிரித்தான்
மருந்து வந்தனை யமரருக் கருளிய மாயோன்
விருந்து வந்தன னென்றுள முருகிய விதுரன்.

கோடு கொண்டகைக் குரிசிலை யலர்ந்த கோகனகக்
காடு கண்டெனக் கண்டுதன் கண்ணிணை களியாத்
தோடு கொண்டதோர் விதுரனிப் பிறப்பையுந் தொலைத்தான்
வீடு கண்டவர்க் கியம்பவும் வேண்டுமோ வேண்டா.

உள்ளி னானுணர்ந் துள்ளமு முருகினா னெழுந்து
துள்ளி னான்விழுந் திணையடி சூடினான் துயரைத்

தள்ளினன் மலர்த் தடக்கையால் தத்துவ வழுதை
அள்ளின னெனக் கண்களா லருந்தின னறியோன்.

முன்னமே துயின்றருளிய முதுபயோ ததியோ
பன்னகாசனப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருகிநீ யெய்தற்கு
என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றன்.

மும்மையாகிய புவனங்கள் முழுதையு மருந்தும்
எம்மையாளுடை நாயகன் விருந்தினுக் கிசைந்தான்
அம்மவென்றன னுறுநா றுயிர மடையர்
தம்மை நோக்கினன் அவர்களும் விரைவுடன் சமைத்தார்

இங்ஙனம் விதுரர் பேரானந்தக்கடலில் மூழ்கி புத்தேளிர் புத்தமிதினுஞ் சுவையுடைத்தாய் நால்வகையுண்டிகளையும் அறுசுவைகளாகச் செய்வித்து கண்ணபிரானுக்கு விருந்துசெய்வித்து ஒருவரும் பெறாத பெரும்பேற்றைப் பெற்றுய்ந்தார்.

கருத்துரை.

திருமால் மருகரே! பரம! குருபா! இமயவல்லியின் புதல்வரே! பழநிமலைமேல்நின்ற பெருமாளே! அடியேன் ஆசைப்பெருங் கடலில் அழுந்தி அவமே துன்புறாமல் மெய்ப்பொருளை யுபதேசிக்க கோழிக்கொடியுடன் மாரகத மயிலில் வந்து அருள்புரியவேண்டும்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

॥ शिवानन्दलहरी ॥

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(171-வது பக்கத் தொடர்ச்சி)

दुराशाभूयिष्ठे दुरधिपगृहद्वारघटके
दुरन्ते संसारे दुरितनिलये दुःखजनके ।
मदायासं किं न व्यपनयसि कस्योपकृतये
वदेयं प्रीतिश्चेत्तव शिव कृतार्थाः खलु वयम् ॥ १९ ॥

(19) து^{3}ராசா பூ^{4}யிஷ்டே^{1} து^{3}ரதி^{4}ப க்^{3}ருஹத்வார க^{4}ட^{1}கே
து^{3}ரந்தே ஸம்ஸாரே து^{3}ரிதநிலயே து^{3}:க^{2}ஜனகே ।
மதா^{3}யாஸம் கிம் ந வ்யபநயஸி கஸ்யோப க்ருதயே
வதே^{3}யம் ப்ரீதிச்சேத்வ சிவ க்ருதார்தா^{2}: க^{2}லு வயம் ॥

பதவுரை.

துராசாபூயிஷ்டே - கெட்ட ஆசையினால் நிறைந்ததாயும்,
துரதிபக்ருஹத்வாரகடகே - கெட்ட அரசர்களுடைய வீட்டுவாசலில்போய் சேர்க்கிறதாயும்,
துரந்தே - முடிவற்றதாயும்,
துரிதநிலயே - பாவங்களுக்கு இருப்பிடமாயும்,
து:கஜனகே - துக்கத்தை உண்டுபண்ணுகிறதாயு மிருக்கின்ற,
ஸம்ஸாரே - (பிறப்பிறப்பாகிய) சம்சாரத்தில்,
மதாயாஸம் - யான்படுகின்ற துன்பத்தை,
கஸ்ய - பிரமனுடைய
உபக்ருதயே - உபகாரத்தின் பொருட்டு,
வ்யபநயஸிகிம் - போக்கடிக்கிறீரா என்ன?
வத - நீ (இதைச்) சொல்,
சிவ - சிவனே! பெருமானே,
தவ - தேவரீருக்கு,

இயம்	- இந்த,
ப்ரீதிச்சேத்	- அன்பு இருக்குமேயானல்,
வயம்	- நாங்கள்,
க்ருதார்தா:கலு	- பயனையடைந்தவர்களாக ஆய்விடுவோமல்லவா ?

பொழிப்புரை.

சிவபெருமானே !, மிகுந்த துராசையுடையதாய், தீயமன்னர்களின் வீட்டுவாசலில் திரிந்துழல்வதாய், அந்தமில்லாததாய், பாவங்களுக்கு இருப்பிடமாய், பிறப்பு இறப்புகளைத் தருவதாயுள்ள சம்சாரத்தில் உழலும் அடியேனுடைய துன்பத்தை நீக்காதது அடியேனுடைய தலையில் தேவரீரது பக்தனுகிய பிரமன் எழுதிய எழுத்துத் தவறிப்போனல் அப்பிரமனுக்கு மகிமைகுறைந்துபோமேஎன்று அவனை உயர்த்தும்பொருட்டோ ? தேவரீருக்கு பக்தர்களிடத்தில் இத்தகைய கருணையிருக்குமானல் நாங்கள் ஈடேறுவதில் என்ன தடையுள்ளது ?

सदा मोहाटव्यां चरति युवतीनां कुचगिरौ
नटत्याशाशाखास्वटति झटिति स्वैरमभितः ।
कपालिन् भिक्षो मे हृदयकपिमत्यन्तचपलं
दृढं भक्त्या बध्द्वा शिव भवदधीनं कुरु विभो ॥ २० ॥

(20) ஸதா மோஹாடவ்யாம் சரதி யுவதீனும் குசகிரௌ
நடத்யாசாசாகா ஸ்வடதி ஝டிதி ஸ்வைரமபித:।
கபாலின் பிக்ஷோ மே ஹ்ருதயகபிமத்யந்தசபலம்
த்ருடம் பக்த்யா பத்வா சிவ பவததீனம் குரு விபோ ॥

பதவுரை

கபாலின்	- பிரமனுடைய மண்டையோட்டை ஏந்தினவரே !	சரதி	- திரிகிறது,
சிவ	- மங்கலவடிவினரே !	யுவதீனும்	- பருவப் பெண்களுடைய
விபோ	- எங்கும் நிறைந்தவரே !	குசகிரௌ	- தனமாகிய மலையில்,
ஸதா	- எப்போதும் (மனக்குரங்கு),	நடதி	- கூத்தாடுகிறது,
மோஹாடவ்யாம்	- அஞ்ஞானமாகிற காட்டில்,	ஆசாசாகாஸு	- (மனைவிமக்கள் முதலியவைகளாலுண்டாகும்) ஆசையாகிய கிளைகளிலும்,
		஝டிதி	- விரைந்து,

அபித: - நாலுபக்கத்திலும்,
ஸ்வைரம் - தனதிஷ்டப்படி,
அடதி - திரிகிறது,
அதிசபலம் - மிக்க சஞ்சலமானது,
மே - என்னுடைய,
ஹ்ருதயகபிம் - மனக்குரங்கை,
பக்த்யா - பக்தியாகிய கயிற்றால்
த்ருடம் - உறுதியாக,
பத்வா - கட்டி,
பவததீனம் - தேவரீர் வசமாகச் செய்துகொள்வீர்,

பொழிப்புரை.

சிவபெருமானே !, எங்கும் நிறைந்தவரே ! கபாலத்தை காத்திலேந்தியவரே ! எப்போதும் மோகமாகிய காட்டிலலைவதும், இளமகளிரது தனங்களாகிய குன்றுகளில் நடிப்பதும், மனை மக்கள் சுற்றத்தில்வைத்துள்ள ஆசையாகிய மாக்கிளைகளில் தாவித்திரிவதும், கணப்பொழுதுகூட அசைவற்றில்லாமல் உழல்வதுமாகிய அடியேனுடைய மனமாகிய குரங்கை பக்தியென்ற கயிற்றால் நன்றாகக்கட்டி தேவரீருடைய வசமாகச் செய்துகொள்வீர்.

ஆண்டவனே ! நீர் கபாலத்தை எந்தி பிச்சைக்குப் போகுங்கால் அடியேனுடைய மனக்குரங்கையுங் கொண்டுபோனால் பிச்சைநிரம்பக் கிடைக்கும் என்று நயமாகக்கூறுகின்றார்.

காடுங் கரையு மனக்குரங்கு கால்விட்டோட அதன்பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ

—தாயுமானர்.

धृतिस्तम्भाधारां दृढगुणनिबद्धां सगमनां
विचित्रां पद्माढ्यां प्रतिदिवससन्मार्गघटिताम् ।
स्मरारे मच्चेतःस्फुटपटकुटीं प्राप्य विशदां
जय स्वामिन् शक्त्या सह शिव गणैः सेवित विभो ॥ २१ ॥

(21) த்ருதிஸ்தம்பாதாராம் த்ருடகுணநிபத்தாம் ஸகமனாம்
விசித்ராம் பத்மாட்யாம் ப்ரதிதிவஸ ஸன்மார்க்க கடிதாம் ।
ஸ்மாரே மச்சேத: ஸ்புடபடகுடீம் ப்ராப்ய விசதாம்
ஜய ஸ்வாமின் சக்த்யா ஸஹ சிவ கணை: ஸேவிதவிபோ ॥

பதவுரை.

ஸ்மாரே - மன்மதனுக்கு சத்துருவே,
ஸ்வாமின் - எல்லாவற்றையும் உடைமையாக உடையவரே,
கணை: - பிரமதகணங்களால்,
ஸேவித - வணங்கப்பட்டவரே!
சிவ - மங்களகரரே!
விபோ - எங்கும் நிறைந்தவரே!
த்ருதிஸ்தம்பாதாரம் - (விஷயங்கள் நித்தியமென்ற) தாரணையாகிற (கூடாரமிருப்பதற்காதாரமான நடுத்) தூணைப் பிடிப்பாகவுடையதாயும்,
த்ருடகுண நிபத்வாம் - கெட்டியான குணங்களாகிற (கயிறுகளால்) கட்டப்பட்டதாயும்,
ஸகமனும் - நினைத்த இடங்களுக்குப்போதலையுடையதாயும்,
விசித்ரம் - அநேகவித கெட்டவாசனைகளையுடையதாயும்,
பத்மாட்யாம் - பணத்தாசையுடன் கூடியதாயும், தாமரைப்பூ முதலிய சித்திரங்களுடன்கூடியதாயும்,
இதிதிவஸ ஸன்மார்க்ககடிதாம் - நாள்தோறும் பிரமத்தைத்தேடுவதில் சேர்க்கப்பட்டதாயும், நல்ல வழியின் அருகில் செய்யப்பட்டதாயும்,
விசதாம் - வெளுப்பாயும் (நிர்மலமாயும் இருக்கிற),
மச்சேத:ஸ்புடபடகுடீம்- அடியேனுடைய மனதாகிற பிரகாசிக்கின்ற கூடாரத்தை,
ஸக்த்யா ஸஹ - அம்பிகையுடனே,
ப்ராப்ய - அடைந்து,
ஜய - எல்லாவற்றிற்கும் மேலாக விளங்குவீராக.

பொழிப்புரை

ஓ மஹாதேவரே! தைரியமாகிய தூணை ஆதாரமாகவுடையதும், பலமான முக்குணங்களாகிய கயிறுகளால் கட்டப்பட்டதும், அசையுந்தன்மையுடையதும், பல வர்ணங்களையுடையதும், தாமரை வடிவத்தையுடையதும், நாள்தோறும் பிரமவிசாரத்திலும் ராஜமார்க்கத்திலும் நிற்பதுமான அடியேனுடைய மனமாகியகூடாரத்தில் பார்வதீ தேவியோடும் எழுந்தருளியிருப்பீராக.

மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தனைப்
பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி
செந்தை நீ யிருக்க இட்டனன் . . , ,
. . . . . . , ...
அமையாக் காட்சி இமையாக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்
கெழுந்தருளத் தரும் எம்பெருமானே. —திருவெண்காடர்.

(தொடரும்)

212

ஓம் ஸ்கந்தாய நம:

கந்தர் திருவிளையாடல்

(178-வது பக்கத் தொடர்ச்சி)

அறுமுகக்கடவுளுக்கு வியாழபகவான் அசுரர் வரலாறு கூறுதல்.

காசிபருடைய புதல்வர்களாகிய அறுபத்தாறு கோடி யசுரர்களுக்கு அரசனாகிய அசுரேந்திரன் மங்கலகேசி என்னும் அரக்கியை மணந்து சுரசையென்னும் மகளைப்பெற்றான். அவள் வளர்ந்தபின் அசுரகுருவாகிய சுக்கிரன் மாயையின் கல்விகள் அனைத்தையும் அவளுக்குணர்த்தி மாயை என்று பெயரிட்டனர். அசுரர்கள் சிறுமையையும் தேவர்கள் பெருமையையும் தேவர்கள் அசுரரால் வருந்தும் வண்ணம் திருநந்திதேவர் சபித்தமையையும் சுக்கிரன் எண்ணி, மாயையை நோக்கி, "மாயையே! திருமாலாதி தேவர்களால் நம் அசுரகுலம் அழிந்துவிட்டது, இனி உன்னால் அது வளரவேண்டும்; நீ திருமகளும் நாணும் பெருவனப்புடன் சென்று காசிபரை மயக்கி, புத்திரர்களைப்பெற்று அவர்களுக்குத் தவம் யாகங்களை உணர்த்தி குலவிருத்தி செய்யக்கடவாய்" என்று பணித்தார். மாயை வணங்கி விடைபெற்று, மேருகிரிக்கு வடபால் காசிபர் தவஞ் செய்யும் வனத்தையடைந்தாள்.

மாயை அங்கு பூமலர்வாவிகளையும், மணல் மேடைகளையும் தாமரை ஓடைகளையும் பூஞ்சோலைகளையும், கொடிப்பந்தர்களையுமுண்டாக்கினாள். காசிபர் அவற்றைக்கண்டு அற்புதங்கொண்டு, "இவற்றையுண்டாக்கியவர் யாரோ? அமராவதி யிழிந்ததோ? என்று ஐயுற்றபோது, மாயை ஒரு இரத்தினக்குன்றின்மேல் வானவில்போல் தோன்றினாள். அவளது பேரெழிலைக்கண்ட காசிபர் மையலுற்று, அவளருகுசென்று "கட்டழகியே! நின் வரவு நல்வரவு; நின் பெயர் யாது? நின் குலம் யாது? நின் உறைவிடம் யாது? கூறுதி" என்று வினவ, மாயை, "முனிபுங்கவரே! தவமுனிவராகிய நீர் என் வரலாற்றை வினவிநிற்பது தகுதியன்று; தவம்செய்யப்போம்" என்றாள். காசிபர், "மங்கையே! நான் எண்ணில்காலம் உடல்வருந்தித்

தவஞ்செய்தது உன்னையடைதற்பொருட்டேயாம்; தவத்தின்பயனாக நின்னையடைந்தேன் ; இரங்கக்கடவாய்" என்றார். மாயை, "மாதவ! நான் உத்தரபூமியிலுள்ளவள்; மேருமலைக்குத் தென்பாலுள்ள கங்கையில் நீராடச்செல்லுகிறேன் ; நில்லும்" என்றாள். காசிபர், "மாதர் திலகமே! கங்கை முதலிய நதிகள் ஏழையும், சிவவிட்டுணு தலங்களையும், பொன்னுலகமுதலிய தேவருலகங்களையும், அங்கங்குள்ள தேவர்களையும் ஓரிமைப்பொழுதில் இங்கு விரைந்தழைக்க வல்லேன்; மும்மூர்த்திகளையும் மூவுலகத்துள்ளோரையும் நீ காணவிரும்பின் இங்கு வருவிப்பேன் ; தேவாமிர்தத்தையும் தரவல்லேன் ; அரம்பை முதலிய அரமகளிர்வந்து உனக்கு ஏவல்செய்யும்வண்ணம் செய்வேன் ; என் மையலைத் தணிப்பாய்" என்றார். மாயை, "மாமுனிவரே! தனித்தவளென்று கருதி இவ்வாறு கூறினீர்; இங்கேயே நில்லும்" என்று கூறி கங்கையை நோக்கிச் செல்லுவாள்போல் சென்று மறைந்தாள். காசிபர் மாயையைத் தேடிப்புலம்பினார்.

கதிரவன் மேற்கடலில் மூழ்கினான் ; காசிபர் காமநோயால் மிகவுங் கலங்கினார். மாயை, காசிபருக்குமுன் தோன்றினாள். காசிபர் அவள்முன் சென்று வேண்டிநின்றார். மாயை, "மாதவரே! நான் எந்த எந்த வடிவங்கொள்வேனோ அந்த அந்த வடிவத்தை நீருங் கொண்டு என்னை மருவவேண்டும்" என்ற உடன்படிக்கைச் செய்துகொண்டு, இருவரும் ஒரு அழகிய தேவவடிவத்தைக்கொண்டு அங்குள்ள மண்டபத்தில் பஞ்சணைமேல் முதல்யாமத்திற் கலந்தார்கள் ; அப்பொழுது **சூரபன்மா** தோன்றினான் ; அப்புணர்ச்சிக்கண் இருவர் உடம்பின் வேர்வையில் முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினார்கள்.

அவர்களை அவ்விடத்திலே நிறுத்தி வேறொரு மண்டபத்திற் சென்று இரண்டாம் யாமத்தில் இருவரும் சிங்கவடிவங்கொண்டு கலந்தார்கள் ; அப்பொழுது ஆயிரம் சிங்கமுகங்களும் இரண்டாயிரம் கரங்களுமுடைய **சிங்கமுகாசுரன்** பிறந்தான். அப்புணர்ச்சியின் வேர்வையினின்றும் சிங்கமுகத்துடன் நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினார்கள்.

மாயை அவ்விடத்திலேயே அவர்களை விடுத்து வேறொரு மண்டபஞ்சென்று பெண்யானையாக, காசிபர் ஆண்யானையாகிச்சேர,

யானைமுகத்தோடு மூன்றாம் யாமத்தில் நான்கு கோடுகளோடு தாரகாசுரன் பிறந்தான். அப்பொழுது வேர்வையில் நாற்பதினாயிரம் அசுரர்கள் யானைமுகத்தோடு பிறந்தார்கள். வேறொரு மண்டபஞ் சென்று இருவரும் ஆட்டுருவத்தோடு புணர நான்காம் யாமத்தில் அசமுகி பிறந்தாள், அக்காலை வேர்வையில் ஆட்டுமுகத்துடன் முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினார்கள். மீளவும் அவ்விருவரும் யாளி, புலி, குதிரை, மான், பசு, காடி, பன்றி கூளி முதலிய வடிவங்களைத்தாங்கி விடியற்காலையில் புணர்ந்து அறுபதினாயிரம் வெள்ளம் அசுரர்களைப் பெற்றார்கள்; கதிரவன் உதித்தான். மாயையும் காசிபரும் முன்னைய வடிவத்தைக்கொண்டு, சூரன்முதலிய மக்களையும் இரண்டிலக்க வெள்ளம் அசுரர்களையுங்கண்டு அற்புதமும் அன்புங்கொண்டார்கள்.

சூரபன்மனும் சிங்கமுகனும் தாரகனும் தாய்தந்தைகளைத் தொழுது, நாங்கள் செய்வது யாது? சொல்லுங்கள்" என்று வினவ காசிபர், "மக்களே! நீங்கள் அறநெறியில்நிற்கக் கடவீர்கள்; ஐந்தொழிற்கும் அதிபராகிய சிவபெருமானே பதியெனப்படுவர்; இருவினைவயப்பட்டு பிறந்திறந்துழலும் உயிர்களாகிய நாம் பசுக்கள். ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களாகிய பாசத்தாற் கட்டுண்ட பசுக்களுக்கு உறுதியைத் தருவது அறமேயாம். கல்வி செல்வம் வீரம் பிறவும் நிலையில்லாதன; அறஞ்செய்ய அன்பும் அருளும் உண்டாகும்; அவை உண்டாகத் தவம் உண்டாகும்; தவம் உண்டாயின் அவ்வுயிர் சிவத்தைச்சார்ந்து பிறவித்துன்பத்தை நீக்கி இன்புறும்; தவத்திற்சிறந்த பொருள் மூன்றுலகினுமில்லை; தவத்தினால் எய்தாத பொருளில்லை; தவத்தைச் செய்தே பிரம விட்டுணுக்கள் மேற்பதவியை யடைந்தார்கள்; தவத்திற்கு ஒப்பது மிக்கதுமில்லை; தவஞ்செய்து மார்க்கண்டேயமுனிவர் மறலியைவென்றார்; ஆதலால் நீங்கள் தவத்தைச்செய்து சிவத்தையடையுங்கள்" என்று உபதேசித்தார்.

காசிபர் இவ்வாறு சொல்ல, மாயை நகைத்து, "முனிவரே! நீர் கூறியது உண்மையே; ஆயினும், முத்தியை விரும்புவோர்க்கே அது வேண்டியது; நாம் பெற்ற சிறுவர்கள் பெருஞ்செல்வத்தையும் வெற்றியையும் அழிவில்லாத ஆயுளையும் புகழையும் அடைதல்வேண்டும். அவற்றை விரைவிலடைய உபதேசியும்" என்ன; காசிபர், நின் கருத்து இதுவாயின் நீயே சொல்லக்கடவாய்" என்றார். மாயை தன்

மைந்தரை நோக்கி, "முனிவர் கூறியது உண்மையேயாயினும் உங்களுக்கு ஆவதன்று; நான் சொல்லுவேன் கேளுங்கள்" என்று சொல்லலுற்ருள்.

"மைந்தர்களே! கல்விப்பொருள் செல்வப்பொருள் என்னும் இரண்டில் செல்வப்பொருளே சாலச்சிறப்புடைத்தாம்; கல்வியுடையாரும் செல்வத்தை விரும்பி செல்வரைப்பணிந்துநிற்பர்; செல்வமில்லாதவன் உயிரற்ற உடம்புக்குநிகராவான்; செல்வம் முயற்சியால் வரும்; நீங்கள் பெருமுயற்சிசெய்து ஒருவராலும் பெறுதற்கரிய பெருஞ்செல்வத்தையும் தலைமையையும் பெறவேண்டும்; இத்திசை [illegible]லந்திவு எனப்படும்; இதற்கு வடபூமி அசுரர்கள் தவஞ்செய்தற்கு [illegible]ற்றதாம்; நீங்கள் பரிசனங்களுடன் அங்குசென்று வேள்விசெய் [illegible]ற்கு குண்டங்களைச்செய்து நச்சுசமித்துக்களையிட்டு, மாமிசம் உதி[illegible] முதலியவற்றையுந்தூவி, சிவபிரானைக்குறித்து வீரவேள்வி செய்[illegible]ங்கள்; அவர் தோன்றி விரும்பியதைத் தந்தருளுவர்; நீங்கள் [illegible]ங்கு சென்றவுடன் வேள்விக்கு வேண்டியவற்றை நான் தருவேன் [illegible]ாங்கள்" என்றுசொல்லி, வேள்விசெய்யும் விதியையும் அதற்குரிய [illegible]திரங்களையும் சூரன் முதலிய மூவருக்கும் உபதேசித்தாள். சூரன் [illegible]தலியோர் தாய்தந்தையரை வணங்கி விடைபெற்றுப் புறப்பட்டார் [illegible].

பிறகு, மாயை தன்னருகிருந்த காசிபரை நோக்கி, "நான் புதல் [illegible]ரைப்பேணும்பொருட்டு செல்கிறேன்; நீர் கவலாதிரும்" என்று [illegible]ாயிஞள். காசிபர் பின்தொடர, மாயை, நான் இங்குவந்தது மக் [illegible]ளைப் பெறுதற்பொருட்டே; நான் மாயை; வருந்தாதீர் நில்லும்" [illegible]று சொல்லி மறைந்தாள். காசிபர் மாயையின் பிரிவால் மிகவும் [illegible]ம்மறுகி வருந்தி மதிமயங்கி ஏங்கிநின்ருர். அக்காலை நான்முகக் [illegible]வுள் தம் புதல்வராகிய காசிபர்முன் தோன்றி, "காசிபனே! [illegible]வதம் முதலியதுகளை ஓதியுணர்ந்த நீ பேதைகளைப்போல் ஒரு பெண் மையல்கொண்டு வருந்துதல் தகுதியோ?

உள்ளினுஞ் சுட்டிடும் உணருங் கேள்வியிற்
கொள்ளினுஞ் சுட்டிடும் குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடும் தன்மை யீதினுற்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே

காமத்தை ஒழித்தவான்ருே முத்தியின்பத்தைப் பெறுவர். அறிஞர்கள் காமத்தைக்கனவிலும் நினைப்பரோ? காமமே பெரும்பகை;

நரகத்திற்கு வழிகாட்டி; ஆதலால் காமமுற்று வருந்தாதே; நீ புணர்ந்த பெண்ணும் வஞ்சனையுடைய மாயை; அவளைக்கூடி தீமை செய்தாய்; அது தீரும்பொருட்டு தவஞ்செய்" என்று தேற்றிப் போனார். காசிபர் மையல்நீங்கி மணிமிடற்றண்ணலைவேண்டி தவஞ் செய்வாராயினர். மாயை மக்கட்கு யாகப்பொருள் தரும்பொருட்டு சிவத்தை நினைந்து பெருந்தவஞ்செய்தாள்.

சூரபன்மன் தம்பியர் சூழ சேனைகளுடன் விண்ணும் மண்ணும் கடலும் குலமலைகளும் நடுங்கச்சென்றான். அப்பொழுது அசுரகுருவாகிய சுக்கிரன் அவர்களைக்காணவந்து, அவர்களின் பெருந்திறலைக் கண்டு நடுநடுங்கி, "மாலயனாதி வானவரை இவர்கள் ஒரு கணத்தில் வெல்லுவர்" என்று அற்புதமடைந்து, வசிகர மந்திரத்தைக்கூறி சுந்தரவடிவுடன் சூரன்முன்தோன்றி, "சூரனே! நீ இந்திரன் முத லிய யாவரையும் வென்று அனைவருக்குந் தலைவனாகக் கடவாய்" என்று ஆசிகூறினர். சூரபன்மன் "ஐயரே! தாங்கள் யார்? தா களைக்கண்டவுடனே என் உள்ளமும் எலும்பும் உருகுகின்றன," என றான். சுக்கிரன் "அசுராதிப! நான் உன் குலகுருவாகிய சுக்கி பகவான்; நீ தவஞ்செய்யும்போது பகைவர் ஊறுசெய்வார்கள்; அ விடையூறுகள் நின்னையணுகாவண்ணம் ஒரு மந்திரத்தை உபதேசி போம்; இதனை நாள்தோறும் செபித்துக்கொண்டு கொலை களவு கா மின்றி பொறி புலன்களையடக்கிப் பெருந்தவத்தைச் செய்யக்க வாய்" என்று சிவபெருமானுடைய மந்திரமொன்றை உபதேசித்து போனார்.

சூரபன்மன் ஆலவனஞ்சென்று அங்கே வீரவேள்வி செய்த பொருட்டு பதினாயிர யோசனை பரப்பையுள்வைத்து, அதனைச்சு அசுரர்களைக்கொண்டு மலைகளினாலே மதில்செய்வித்து, அதனைச்சு அசுரர்களை அரணமாக்கிநிறுவி, நான்குதிக்கிலும் வாயில்செய்தா அவ்வாயில்களில் காவல்செய்ய வீரமடந்தையை மந்திரத்தாலழைத்து நிறுவினான். மதிலைச்சுற்றிக் காவல்செய்ய பூதங்களையும் பைசாசங் களையும் காளிகளையும் மந்திரத்தாற் கூவி நிறுத்தினான். வைரவர்களை யும் காவலாக்கினான்; நடுவில் ஆயிரம்யோசனை அகலம் ஆழமுள்ள ஒரு ஓமகுண்டமும், அதனைச்சூழ நூற்றெட்டு ஓமகுண்டமும், அத னைச்சூழ, ஆயிரத்தெட்டு ஓமகுண்டமும், செய்வித்து, யாகப்பொருள் களைவேண்டி மாயையை நினைந்தான். உடனே மாயை சிவமூர்த்தி யின் திருவருளால் சிங்கம் புலி யானை காடி குதிரை ஆடுமுதலிய மிரு

கங்களின் ஊன்களையும் இரத்தம் நெய் பால் தயிர் மது கடுகு மிளகு முதலிய திரவியங்களையும், அரிசி சுருக்கு சுரவம் தருப்பை நெற்பொறி நச்சு சமித்து முதலியவைகளையும் மலைபோல் குவித்துவிட்டாள்.

சூரபன்மன் நடுவேதியின் மத்தியில் வச்சிரகம்பத்தை நாட்டி, நாற்றிசை வாயில்தோறும்போய் வீரமடந்தையைப் பூசித்து, பலி கொடுத்து, எல்லா குண்டங்களிலும் நச்சுவிறகிட்டு தீமூட்டி, தாரகனை 108 குண்டங்களையும், சிங்கமுகனை 1008 குண்டங்களையும் அக்கினி தணியாது வேள்விசெய்யப் பணித்து, நடுக்குண்டத்தில் தானமர்ந்து நெய் பொறி உதிரம் மாமிசம் முதலியவற்றைச்சொரிந்து, சிவமந்திரஞ்செபித்து வேள்விசெய்தான். அந்த யாகாக்கினி வானளாவியது. திருமால் பிரமன் முதலியோர் அதுகண்டு நடுநடுங்கினார்கள். இவ்வாறு சூரன் பதினாயிரமாண்டு யாகஞ்செய்தான். சிவபெருமான் தெரிசனமுண்டாகாமையால் வருந்தி, தம்பியரை யாகத் தொழிலில் வைத்து ஆகாயத்தில்நின்று வாளினால் தன்னுடம்பின் ஊன்களையறுத்து அறுத்து நெருப்பில் ஆகுதியாகத்தந்தான். அரிய அரிய முன்போல் தசைகள் வளர்ந்தது; அதுகண்டு சூரபன்மன் விம்மிதமுற்று விண்ணில்நின்றவண்ணமே தன் உடம்பின் தசைகளையும் உதிரத்தையும் சொரிந்துகொண்டு ஆயிரம் வருடம் யாகஞ்செய்தான். செய்தும் கண்ணுதற்கடவுள் தெரிசனந்தாராமையால் மனம் வருந்திய சூரபன்மன் "இனி மாள்வேன்" என்று வச்சிரதம்பத்திற் பாய்ந்து சாம்பராயினன். அதுகண்ட சிங்கமுகனும் தாரகனும் தாயையிழந்த கன்றுபோல் கதறி, கண்கலுழ்ந்து, "அண்ணா! அண்ணா! இனி என்று காண்பேம்" என்று பலவாறு புலம்பினார்கள். இது கண்டு இந்திரன் மகிழ்ந்தான். சிங்கமுகன் தன் ஆயிரம் தலைகளையும் அறுத்து அக்கினியிலிட்டான்; இடஇட தலைகள் வளர்ந்தன; தாரகனும் தன் தலையை யறுத்துத்தள்ளினன்; அதுவும் வளர்ந்து கொண்டேயிருந்தது; சிங்கமுகன் தானும் அக்கினியில்வீழ்ந்திறக்க எண்ணி எழுந்தான்; சிவபெருமான் அதனையறிந்து, விருத்தவேதியராய்வந்து, சிங்கமுகனை நோக்கி, "நின்வரலாறு யாது? என் வருந்துகிறாய்?" என்றுவினவியருள; சிங்கமுகன் தன் வரலாற்றைக்கூறி வணங்கினன். சிவபெருமான் "வருந்தாதீர், இப்பொழுதே சூரபன்மனை எழுப்புகின்றோம்" என்று அருளிச்செய்து, தேவகங்கையை வரும்படி திருவுளஞ்செய்தார். அக்கங்கை வந்து பெருமானைப் பணிந்து நடுக்குண்டத்தில் புகுதலும், சூரபன்மன் ஆர்த்தெழுந்தான்.

அசுரர்கள் அதுகண்டு ஆரவாரஞ்செய்தார்கள்; தேவர்கள் ஓடியொளிந்தார்கள்.

சிவபெருமான் விடையின்மீது மூன்று கண்களும் நான்குதோள்களுமாய் உமாதேவியுடன் தெரிசனந்தந்தருளினர். சூரபன்மன் துணைவர்களுடன் பன்முறை நிலத்தில்விழுந்து பணிந்து துதித்து நின்றான். சிவபெருமான், "சூரபன்ம! நெடுங்காலம் நம்மை நினைத்துப் பெருந்தவஞ்செய்து இளைத்தனை; யாது வரம்வேண்டும்?" என்று அருளிச்செய்தார். சூரபன்மன், எம்பெருமானே! இப்பிருதிவியிலுள்ள எல்லா அண்டங்கட்கும் யான் அரசனாதல்வேண்டும்; அவைகளை ஆளுதற்குரிய ஆக்ஞாசக்கரமும், அவற்றிற்கு நினைத்தவுடனே சென்று திரும்பும் வாகனங்களையும், எப்பொழுதும் அழியாமலிருக்கின்ற ஆக்கையையும், திருமாலாதிதேவர்களை வெல்லும் படைக்கலங்களையும், அழியாவரமும் தந்தருள்வீர்" என்று வேண்டினன்,

சிவபெருமான், "பிரிதிவியிலுள்ள ஆயிரங்கோடி யண்டங்களுள் ஆயிரத்தெட்டு அண்டங்களையும், நூற்றெட்டுயுகம் ஆள்கடவாய்" என்று அருளி, அவ்வண்டங்கட்கெல்லாம் கணப்பொழுதில் சென்று திரும்பும் இந்திரஞாலத்தேரும், ஆக்ஞாசக்கரமும், சிங்கவாகனத்தையும், தேவர்கள் யாவர்க்கும் முதல்வனாகுந் தலைமையையும், யாவரையும் வெல்லும் வீரத்தையும், ஆற்றலையும், பாசுபதம் முதலிய படைக்கலங்களையும், எந்நாளும் அழியாத வச்சிரயாக்கையையும், பதினாயிரங்கோடி வெள்ளம் அசுரசேனைகளையும் தந்தருளினர். சிங்கமுகனும் தாரகனும் வணங்கிநிற்க, "நீங்கள் இருவரும் இரு புயம்போல் வாழுதிர்; தேவர்கள் அனைவரையும் வென்று புகழுடைவீர்கள்; உங்கள் மூவரையும் நம் சத்தி யொன்றேயன்றி வேறு யாவர் வெல்லவல்லார்?" என்று அருளிச்செய்து அழியாத தேர் பாசுபத முதலியவற்றைக் நல்கி மறைந்தருளினர்.

(தொடரும்).

உபதேசம்.

பிறருக்குத் தீங்கு செய்துவிட்டோமென்று மகிழ்ச்சி யடையாதே; உனக்கே நீ தீங்கு செய்துகொண்டாய். பிறருக்குச் செய்த தீமை திரும்பவும் உன்னையே வந்தடையும். சுவற்றில் அடித்த பந்து உன்னையே நோக்கி வருவதுபோலென்றறிக.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யில் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

219

உ

ஓம் குஹாயநம:

கற்பு

(182-வது பக்கத் தொடர்ச்சி)

மனைவி கணவனிடம் ஒழுகும் முறை.

உலகில் அநேக குடும்பங்களில் கணவன் மனைவியர்க்குள் ஒற்றுமை சிறிதுமின்றி எக்காலமும் இன்பமென்பதே அணுத்துணையும் இல்லாமற்போகிறது. இதற்குக் காரணம் மனைவி கணவனிடத்தில் ஒழுகும் முறையையும், கணவன் மனைவியினிடத்தில் ஒழுகும் முறையையும், உணராததேயாகும். இதனைத்தெரிந்து நேர்மையாகநடந்து வந்தால் கணவன் மனைவியர் கருத்தொருமித்து புனிதவாழ்வு நடத்தி இம்மை மறுமை நலன்களைப்பெற்று இன்புறலாம். இம்முறை தெரியாத அநேக பெண்கள், கணவனைத் தன்வசமாக்கும்பொருட்டு, வசிய மருந்தென்ற பெயருடன், பல்லிமுட்டை பாம்புச்சட்டை, அரணையின் வால்முதலிய அநேக தீங்கை விளைவிக்கும் விஷப்பொருள்களால் செய்த மருந்துகளைக்கொடுக்கிறார்கள். அத்தீயமருந்துகள் கணவன் வயிற்றுக்குள்சென்று தீராத வியாதியால் பீடிக்கப்பட்டு ஒரு சமயம் கணவன் மடியவும் நேருகின்றது ; என்னே பேதமை ? மருந்தாலும் மந்திரத்தாலும் கணவனை வசமாக்குவது பாவமும் பழியுமாகும். தனது சீரிய ஒழுக்கத்தாலும் எத்தகைய குணக்கேடான கணவனையும் தன்வசமாக்கிவிடலாம். அடியில்கண்ட அந்த ஒழுக்கமுறையை பெண்மக்கள் ஊன்றிப்படித்து, கருத்திலிருத்தி, அங்ஙனமே ஒழுகி நலம் பெறுவார்களாக.

(1) கணவனைக்கடவுளாகக்கருதி பக்தியைச் செலுத்துதல் ;

(2) கணவனுக்கு எந்த உணவு—எந்தப் பதார்த்தங்கள் பிரியமோ அவற்றைச் சுசியாகவும் இனிமையாகவும் சமைத்தல் ;

(3) கணவன் உணவுக்கு வந்தபோது, தமது வேலைக்காரர்களைக்கொண்டாவது, மகள் முதலியோரைக்கொண்டாவது, அன்னம் படைக்கச்செய்யாது, தாமே எழுந்து கணவன் இருக்கப்பீடந்தந்து, இலையிட்டு முறையாக அன்னம்படைத்து அருகிலிருந்து, கணவன்

எந்த பதார்த்தத்தைப் பிரியமாக உண்ணுகிருனே அதனைக் குறிப் பறிந்து படைத்து உபசரிப்பது ;

(4) கணவன் விரும்பியவண்ணமெல்லாம் நடத்தல் ;

(5) கணவனுடைய இரகசியத்தை வெளிப்படுத்தாமல் காப் பாற்றுதல்;

(6) தன் மனதிலுள்ள கோரிக்கைகளையும் இரகசியங்களையும் கணவனிடம் வெளிப்படுத்துதல் ;

(7) தன்னுடைய கோபத்தை அடக்குதல் ;

(8) எப்போதும் மலர்ந்தமுகத்துடன் இருத்தல், சிறுவிஷயத் திற்கெல்லாம் சிணுங்கி வாழைப்பூவைப்போல் முகத்தை வைத்துக் கொள்ளாதிருத்தல் ;

(9) கணவன் மனவருத்தமாயிருக்கும்போதும், வேறு வகை களில் மனங் கலங்கியிருக்கும்போதும், பல இனிய மொழிகளைச் சொல்லி இன்புறச்செய்தல்;

(10) கணவன் உண்டபின் அவனுடைய உச்சிட்டத்தை அன் புடன் உண்ணுதல் ;

(11) கணவனுடைய பகைவர்களுடன் கலந்து பேசுதலும் பழகுதலும் இன்றித் தாமும் பகைத்தல் ;

(12) கணவனுக்கு அன்புடையவர்களிடத்தில் தாமும் அன் புடனிருத்தல் ;

(13) கணவனுக்குவிருப்பமானபொருள்களை தாமும்விரும்பல்;

(14) கணவன் மகிழும்போது தாமும் மகிழ்தல் ; அவன் வருந் தும்போது தாமும் வருந்துதல் ;

(15) கணவன் அகாரணமாகக் கோபித்தாலும், வைதாலும், பொறுமையா யிருத்தல்; கோபமாறி சாந்தமுற்றிருக்கும்போது அதைப்பற்றிச் சொல்லி அவன் கோபித்தது அகாரணமென்று தெரி வித்தல் ;

(16) கணவனிடத்தில் தமக்குள்ள அன்பை வாயால் சொல் லிக்கொண்டு திரியாமல் செய்கைகளாலும் குறிப்பாலுங் காட்டுதல்;

(17) கணவன் வேற்று ஆண்மக்களுடன் பேசிக்கொண்டிருக் கும்போது சுவறு கதவுபக்கங்களில்நின்று ஒற்றுக்கேளாமலிருத்தல்;

(18) கணவன் தன் பிரதாபங்களைப்பற்றியும், தன் காரியங் களைப்பற்றியும், தம்மிடம்கூறும்பொழுது அதனை அன்புடன்கேட்டல்;

(19) தமது மனத்திற்கு ஏதாவது வருத்தம் நேரிட்டால் அவ் வருத்தத்தைக் கணவனிடம் சொல்லிக்கொள்ளாமலிருத்தல்; சொல் லிக்கொள்வதால் கணவன் வருந்துவானென்று எண்ணி, கணவன் கேட்டபோதும் உடம்பு நலமில்லையென்று அதை அவனிடம்மறைத்து வைத்தல்;

(20) கணவனைத்தவிர மற்ற ஆடவரை (அதாவது தம்பி, தமை யன், பிதா, மகனாக இருக்கினும் புகழப்படாது) தமது வாக்கால் புக ழாமலிருத்தல்;

(21) கணவன் தமக்கு வாங்கிக்கொடுத்த ஆடை ஆபரணங் களை அன்புடன்பெற்று அவைகளைப்பற்றி அவன்முன் புகழ்தல்;

(22) கணவன் மரித்தபின் தாம் உயிர்வாழ தமக்குப் பிரிய மில்லையென்றும், அவனுடன் எப்பொழுதும் நீங்காமல் வசிப்பதே தமக்குப்பிரியமென்றும் காட்டுதல்;

(23) கணவனுக்குப் பாக்கியம்வந்தபோதும், அவன் எண்ணிய பொருள் எய்தியபோதும், நோய்வாய்ப்பட்டிருந்து சுகமுற்றபோதும் தெய்வத்தைவணங்கித் திருவருளைப் போற்றுதல்;

(24) கணவன்கண்டு மகிழத் தம்மை நல்லுடையாலும், பொன் னுபாணங்களாலும் அலங்கரித்துக்கொண்டு திருமகளைப் போல் விளங்குதல்;

(25) தமக்குத் தாய்வீட்டார்மூலமாவது வேறு நியாய வழி களிலாவது பொருள்கிடைத்தால் அதைக் கணவனுக்குத் தெரியாமல் வேறுயாரிடமாவது கொடுத்துவைத்தல், வட்டிக்குக்கொடுத்தல் முத லிய செய்யாது கணவனிடத்திலேயே கொடுத்துவைத்தல்;

(26) கணவனைவிட்டுத் தனியாகத் தேர் திருவிழாக்களுக்கு அயல்பெண்களுடன் கலந்து போகாதிருத்தல்; கணவனுக்குத் தெரி யாமல் துணிமணிகளை வாங்காதிருத்தல், கணவனுக்குத் தெரியாமல் சீட்டுக் கட்டாமலிருத்தல்;

(27) கணவன் உபயோகப்படுத்திய வெற்றிலை, பூ, சந்தனம், முதலியவற்றைத் தாமும் அன்புடன் உபயோகித்தல்;

(28) கணவனுடைய கல்வித்திறம், தொழில்வன்மை, அழகு, சாந்தம், நற்குணம், இவைகளைப் பிறரிடம் புகழ்ந்துபேசுதல்;

(29) இம்மையில்மாத்திரமல்ல, மறுமையிலும் அவனைப்பிரியா திருக்க இறைவனைவேண்டுதல்;

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனக்
கண்ணிறை நீர் கொண்டனள்

— திருக்குறள்.

(30) கணவன் எழுந்திருக்கு முன் எழுந்து கைகால் முகங்களைத் தூய்மைசெய்து மஞ்சள் குங்குமந் தரித்துக்கொள்ளுதல் ;

(31) கணவன் உத்திரவின்றி தாய்வீட்டிற்கேனும் போகாதிருத்தல் ;

(32) கணவனைப்பற்றி அயலாரிடம் தூற்றுமலிருத்தல் ;

(33) கணவன்வீட்டில் நடக்கும் விஷயங்களை தாய்வீட்டிலும் பிற இடங்களிலும் இழித்துக்கூறுமலிருத்தல் ;

(34) கணவனுடைய தாய்தந்தைகளை (மாமி மாமன்) தம்முடைய தாய்தந்தைகளாக எண்ணி அவர்களுக்கு வேண்டிய உணவுகளைத்தந்து உபசரித்தல் ;

(35) கணவன் பாடத்தெரிந்தவனுயிருந்தால் பாடச்சொல்லிக் கேட்டு மகிழ்தல் ; அல்லது அவனுக்குத் தெரிந்த வேலையை செய்யச் சொல்லிப் பார்த்து மகிழ்தல் ;

(36) தமக்குப் பாடத்தெரிந்தால் கணவன் கேட்க இனிமையாகப்பாடி அவனுக்கு இன்பமூட்டுதல் ;

(37) கணவன் வேற்றூருக்குச் சென்றுள்ளபோது தம்மை அலங்கரித்துக்கொள்ளாதிருத்தல் ; கணவன் வெளியூரிலிருந்து வந்தால் மழைமுகங்கண்ட பயிர்போலும், தாய்முகங்கண்ட சேய்போலும், கணவனை மகிழ்ந்துவரவேற்று நீராடச்செய்து இனிய உணவைக் கொடுத்து உபசரித்தல் ;

(38) கணவனுடன் தனித்திருக்கும்போது, உணவு, உடை, ஆபரணம் இவைகளைப்பற்றிப் பேசாது, ஆவியீடேறுவதற்குரிய நன்னெறிகளைப்பற்றி பேசுதல்;

(39) கணவன் இரவு சாப்பிட்டபின் தன் கையால் படுக்கையைவிரித்து, கணவன் படுத்தபின் கால்பிடித்து உடல்வலியை நீக்குதல் ;

(40) கணவன் நினைப்பறிந்து ஏவாமுன்னமே அவனுக்கு வேண்டியவற்றைச் செய்தல் ;

(41) கணவன் ஏதாவது காரணத்தால் தம்முடன் பேசாதிருக்கில் "கிடக்கட்டும்" என்றில்லாமல் தாமே வலிந்துபேசி அவனுடைய பிணக்கை நீக்குதல் ;

(42) கணவன், சிநேகிதரையோ வேறு அதிதிகளையோ உணவுக்கு அழைத்துக்கொண்டுவந்தால் "வேளைதப்பியவேளையில் என்ன விருந்து, இந்த ஆண்பிள்ளைக்கு சமயாசமயம் தெரிவதில்லை" என்று முணுமுணுக்காது, உடனே அன்புடன் வரவேற்று உணவு தருதல்,

(43) கணவன் நீராடும்போது அருகிலிருந்து உடம்பு தேய்த்தல், ஈரம் மாற்ற உலர்ந்த துண்டுவஸ்திரந்தருதல் முதலியவற்றைச் செய்தல்;

(44) கணவன் பூஜை செய்யும்போது அருகிலிருந்து மலர் திருத்திக்கொடுத்தல், விளக்கேற்றல், நிவேதனம் அமைத்துத்தருதல் அபிஷேகப்பொருளை வகைப்படுத்திக்கொடுத்தல் முதலிய பூஜோபகரணங்களைக் கவனித்தல்;

(45) கணவனுக்கு இரு மனைவியிருந்தால் சக்களத்தியிடம் மாறுபாடடையாது சண்டைபிடிக்காது சகோதரியாக எண்ணி கலந்திருத்தல்;

(46) கணவனுக்கு முதல் மனைவி யிறந்துபோய், அம் முதல் மனைவியின் மக்களிருந்தால் அவர்களைத் தமது மக்களாக எண்ணி கண்ணுங்கருத்துமாக வளர்த்து மாற்றாந்தாய் என்ற எண்ணம் அம் மக்கள்மனத்தில் உண்டாகாவண்ணம் நடந்து, அந்த வகையில் கணவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியை யுண்டாக்குதல்,

(47) தீய ஒழுக்கமுடைய பெண்களிடம் கூடாதிருத்தல்,

(48) கணவன் தொழில்நிமித்தம், ஆபீசுக்குப்போயிருக்கும்போது பகல் நாடகங்களுக்குப் போதல்முதலிய தீமைகளைச் செய்யாதிருத்தல்;

(49) தீயநடக்கையுடைய பிள்ளைகளைக் கணவன் கண்டிக்கும்போது தாங்கள் பரிந்துபேசி, கணவனுக்குத்தெரியாமல் பணத்தைக் கொடுத்துப் பிள்ளைகளை நல்வழிப்படுத்தாது மனம்போலவிடுதல் ;

(50) கணவன் கூடா ஒழுக்கத்தையுடையவனாக இருந்தால், அதுபற்றி அவனுடன் சண்டையிடாமல், அவன் நல்வழிப்படுமாறு தெய்வத்தை வேண்டிக்கொண்டு, கணவனைத் தூற்றாமலிருத்தல் ;

(51) கணவன் வருந்தியீட்டியபொருளைக் கண்டபடி ஊதாரி யாகச்செலவுசெய்து அவனைக்கடன்காரனாகச்செய்யாதிருத்தல்;

(52) கணவனுடைய வருவாயில் சிறிது மீதம்பண்ணிவைத் திருந்து அவனுக்குப் பொருள் சங்கடம் வரும்போது அதனைத்தந்து உபகரித்தல் ;

(53) கணவனுக்கு ஆயுள், செல்வம், புகழ், ஞானம் முதலிய மென் மேலும் பெருகுமாறு இறைவனை ஏத்துதல்;

(54) கணவன் "வேண்டாம்" என்று மறுக்கின்றகாரியத்தை விட்டுவிடுதல் ;

(55) கணவனிடத்தில் பேசும்போது, இனிமையாகவும், மரி யாதையாகவும், பணிவாகவும் பேசுதல்;

(56) கணவனிடம் அடிக்கடி "இந்தச்சீலைவேண்டும், இந்த நகைவேண்டும், இந்தப் பொருள்வேண்டும்" என்று தொந்தரை செய் யாதிருத்தல் ;

(57) கணவன்வாக்கை வேதவாக்காக எண்ணுதல் ;

(58) கணவன் ஏழையாயிருந்தாலும் அவனை மதித்து தம்மை விட ஏழைகளைக்கண்டு, "தமது வாழ்வு மேல்" என்று மகிழ்தல் ;

(59) கணவனுடைய சகோதரர்களைப்பற்றி அவனிடம்குற்றங் களைப்புனைந்து அவனைக்குடும்பத்தினின்றும் வேறுசெய்யாதிருத்தல்;

(60) கணவனுக்கு எதைச்செய்தால் திருப்தியோ அதையே செய்தல் ;

(தொடரும்.)

வினா விடை.

வினா:—முழுப்பொட்டை யார் ? விடை :—காமுகன்.

வினா:—வீரன் யார் ? விடை:—சிற்றின்பத்தை வென்றவன்.

வினா:—பெருமைக்கு மூலகாரணம் எது? விடை:—ஒருவரையும் ஒன்று வேண்டுமென்று ஒருநாளும் கேளாதிருத்தல்.

வினா:—பயம் எதனால் வருகிறது? விடை:—பணத்தால் வருகிறது.

வினா:—ஆயுதங்களில் கூர்மையானது எது ? விடை:—சமயோசிதமான யுக்தியே.

சங்கார்

உ

ஓம் குஹாய நம:

குமரகுருபர ஸ்வாமிகள்

சரித்திரம்.

A. M. நாராயணசாமி அய்யர், மதுரை.

(160-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே அரசன் துயில் உணர்ந்து, அம்மையார் தன் கனவில் தோன்றி, தரிசனங் கொடுத்தருளியதைக்கண்டு, பெரிதும் போற்றி மகிழ்ந்தவனாகி, உடனே அமைச்சரை வரவழைத்து நிகழ்ந்தவை யாவும் கூறி, தனது பரிவாரம்சூழத் திருப்பரங்கிரியை அடைந்து, குமரகுருபரரது திருவடிகளில்பணிந்து, தனக்கு அம்மையார் இட்ட கட்டளையைக்கூறி, அடிகளை மதுரையம்பதியை அடைந்து அங்கு அம்மையார்மீது பாடிய பிள்ளைத்தமிழை அரங்கேற்றவேணும் என்று வேண்ட, குமரகுருபரரும் அதற்கு இசைய, மன்னவன் அடிகளைத் தனது பட்டத்து யானைமீது அமர்த்தி மதுரையம்பதிக்கு அழைத்துவந்தான்.

ஆலயவாயிலை அடைந்ததும், தாயது வருகைகேட்ட தனியிளங் குழவிபோன்று நேயமிக்குடையோராகி நெஞ்சினில் உவகைபூப்ப அம்மையாரின் திருமுன்புஅடைந்து, ஆராதகாதலுடன் அடிபணிந்து "அருள்வடிவாம் அம்மையே! ஆபத்பாந்தவி! அநாதரக்ஷகி! அரும்பொருளே! என்றென்றும் மாறுமலே நினைப்பவர்தம் சிந்தையில் உறையும் செல்வியே! அந்தம்இலா மாமயிலோன் தாயே! பராபரியே! சங்கரியே! அடியேனையும் பொருட்படுத்தி ஆட்கொண்ட தாயே! அடியேன் நிமித்தம் அரசன் கனவில் தோன்றி யருளிய அன்னையே!" எனப் பலவாறு போற்றித் துதிக்க, அவரது பக்தியைக் கண்ட அம்மையார் மற்றும் ஓர் முறை அடிகட்கு தமது திருக்கோலங்காட்டி அருளினார். திருக்கோலம் கண்ட தேசிகரும்திருமலை நாயக்கன் வேண்டியவண்ணமே அன்றே அம்மையாரது திருமுன்பு தாம் பாடிய பிள்ளைத்தமிழை அரங்கேற்றலுற்றவராகி, அன்றைய நாள் காப்புப்பருவமட்டும் தம்பியார் படிக்கத் தாம் அவற்றிற்கு விரிவுரைகூறி அரங்கேற்றினார்.

இரண்டாவது தினம் செங்கீரைப்பருவத்தையும், மூன்றுவது நாள் தாலாட்டுப்பருவத்தையும், நான்காவது நாள் சப்பாணிப்பருவத்தையும், ஐந்தாவதுநாள் முத்தப்பருவத்தையும், தம்பியார் படிக்கத் தாம் அவற்றின் பொருள்களை இனிமையாக எடுத்தோதி அரங்கேற்றினர்.

ஆறுவது நாள் வருகைப் பருவம் அரங்கேற்ற ஆரம்பிக்கவும், குமாரகுருபரரது பக்தியைக்கண்டு பரவசமடைந்த பரமனை பாகத்தில் வைத்த பார்வதிதேவியார், அடிகளது ஆற்றலையும், அவரது பாவன்மையையும் அனைவருக்கும் அறிவிப்பான்வேண்டி, அர்ச்சகர் மகள் வடிவுதாங்கி அரசன் மடிமீதமர்ந்தவளாய், குமாரகுருபரர்கூறும் அரிய விரிவுரைகளை ஆனந்தமுடன் கேட்டுக்கொண்டிருந்தார்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறை பழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே! வளர் சிமைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தி லழ(கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிர் ஓவியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்து மிள
வஞ்சிக் கொடியே! வருகவே
மலயத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே! வருக, வருகவே"

என்ற பாடலை தம்பியார் படிக்க, அருட்கவிவாணர் ஆராக்காதலுடன் விரிவுரை கூறிமுடிக்கவும், அம்மையார் அரசன் கழுத்தில் அணிந்திருந்த முத்தாரத்தைக்கழற்றி அடியார் கழுத்திலிட்டு மறைந்தார்.

இவ்வியல்பு மிக்க செயலைக்கண்ட யார்தான் ஆச்சரியமடையார்? அரசன் அடைந்த ஆனந்தம் கூறும்தரமன்று. தன்னையும் மறந்து செய்வது இன்னது என்பதும் உணரானுய் ஆனந்தத்தாண்டவம் ஆடினன். அடியார் அடிகளில் பணிந்தான், "அருட்கவிவாணரே! அம்மையாரால் உமது ஆற்றல் அறிந்தேன், உம்மால் அம்மையாரைக்கனவிலும் நனவிலும் காணப்பெற்றேன். ஆயினும்

அடியேனது மடிமிசை அர்ச்சகர் மகள் வடிவுதாங்கி அமர்ந்து இருந்தது அம்மையார் என்பது முன்னமே அறியாமற்போயினேன்" எனப்பலவாறு போற்றுவாருயினன். இத்தகைய ஆர்வமுடன் அன்று வருகைப்பருவம் நன்கு அரங்கேற்றப்பட்டது.

ஏழாவதுநாள் அம்புலியை குழந்தையுடன் விளையாட அழைக்கும் பருவமாகிய அம்புலிப்பருவமும், ஏனைய மூன்றுநாட்களில் அம்மானை, நீராடல், ஊசலாடல் ஆகிய மூன்று பருவங்களும் யாதொரு விசேஷமும் இன்றி இனிது அரங்கேற்றப்பட்டது. பிள்ளைத்தமிழ் அரங்கேற்றிமுடிந்தவுடனே, முருகனுல் மூங்கைநீங்கப்பெற்ற முத்தமிழ்வாணரை செம்பொன்னுல் இயற்றிய அரியணைமீதிருத்தி அவர் திருமேனியைப் பொன்னுலும் மணியாலும் அலங்கரித்து, வீரக்கழலை அன்னவரின் திருவடிக்குச்சாத்தி யானை குதிரை சிவிகை குடை கொடி முதலிய விருதுகள் பலவற்றையும் தந்து அவர் அடிபணிந்து மதுரையம்பதியிலேயே சிலகாலம் இருக்கவேண்டும் என்று இறைஞ்சினன் இறைவன்.

அரசனது வேண்டுகோட்கு இணங்கி குமரகுருபரர், திருவாலவாய்க்ஷேத்திரத்தில் சிலகாலந்தங்கியிருந்தார். அவ்வமயம் மீனம்பிகையம்மையாரின் திருவருளால் "மீனட்சியம்மை குறம், மீனட்சியம்மை இரட்டைமணிமாலை, மதுரைக் கலம்பகம்" ஆகியபாமாலைகளை மீனம்பிகை அம்மையாருக்கும், சொக்கநாதப்பெருமானுக்கும் சாத்தி ஆனந்தித்தார்.

ஒருநாள் அரசன் ஏதோ காரணம்பற்றி மனமது சலித்து உணவு உட்கொளாது இருந்ததைக்கண்டு, அமைச்சரும் கோப்பெருந்தேவியாரும் அவர்பால்சென்று உணவு அருந்தும்படிவேண்டியும், அரசன் இசைந்தான் இல்லை. அவ்வமயம் ஆங்குற்ற அடிகள் அரசனை அணுகி "அரசரேறே!

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

ஆதலின் என் வீணே மனஞ்சலிக்கின்றீர், எல்லாம் அவன்செயல், அவனன்றி ஓர் அணுவும் அசையாது, "ஊழிற் பெருவலியாவுள" என மொழிந்தனர்".

அரசனும், அம்மெய்யுரைகேட்டு, உணவு உண்டபின் அடிகளின் அடிபணிந்து "அருட்கடலே! அடியேன் திருக்குறளில் உள்ள நீதிகள் பலவற்றையும் தெரிய அவாமிக்குடையேனுதலின், தாங்கள் அடி

யேன்பால் கிருபைபுரிந்து திருக்குறளில் உள்ள நீதிகள் பலவற்றை யும் ஒருங்கு திரட்டி சுருங்கச்சொல்லவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

குமரகுருபரரும் மனமகிழ்ந்து திருக்குறளாகிய பாற்கடலைக் கடைந்து "நீதிநெறிவிளக்கம்" என்ற அமுதத்தை அரசனுக் களிக்க, அரசன் ஈடிலா உவகை பூத்தானாகி, அவ்வமிர்தத்தை அனை வரும் உண்டு தீநெறி நீங்கி நன்னெறி அடைவான்வேண்டி அடியா ரைக்கொண்டு கற்றோர் பலர்குழுமிய குழாத்தில் அரங்கேற்றச்செய் தான்.

போரசிரியரை அடுத்துப் பேரின்பம் பெறுவான்வேண்டி பெற் றோர்பால் விடைபெற்று வெளிப்போந்த பெருந்தகையார், பொருப் பரையன்பாவை அரசுசெலுத்திய திரு ஆலவாயில் திருமலைநாயக்க ரது ஆதரவில் இருக்கும் நாட்களில் ஒருநாள் தம் அருமைத்தம்பியாம் "குமரனை" அருகில் அழைத்து, "எனது ஆணையை ஆதரிக்கும் இளையோய்! நான் அறிவாசிரியரையடைந்து அறிவுபெற அவாவுடை யேன்; ஆதலின், நீ தாய் தந்தையரை ஆதரிப்பான்வேண்டி அரிதின் இப்பதிநீங்கி திருக்கைலாயபுரம் அடைந்து நல்லொழுக்கம் மிக்க நல்லாளொருத்தியை மணந்து இல்லறமாகிய நல்லறத்தை இனிது நடத்துவாயாக" எனக்கூறி நல்ல ஆசிமொழிகள் பலபகர்ந்து திருக்கைலாயபுரத்திற்கு அனுப்பிவிட்டு, அரசன்பால் அணுகி, "அடியாரை ஆதரிக்கும் ஆர்வமிக்க அரசே! அடியேன் அறிவாசிரி யரைத்தேடி அடையும் அவாவுடையேன்; ஆதலின், ஆலவாயிலை அரிதின் நீங்கவேண்டியவனாகின்றேன்; தாங்கள் எனக்கு விடைதர வேண்டும்" என்றார்.

அருட்கவிவாணரை பிரிய யார்தான் ஆசைப்படுவார்; அரசன் மனம் அவரைப்பிரிய சற்றும் இசைந்திலது. அவர் அடியாரை இன் னும் சிலகாலம் மதுரையிலிருந்து அடியேங்களுக்கு அருள்புரிந்து போகலாம்" என்று வேண்டினன். அடிகட்கும் தம்மை வலியவந்து ஆட்கொண்டு தமது எழில்மிக்க இளம் திருக்கோலக்காட்சிநல்கிய அருள்வடிவாம் அங்கையற்கண்ணம்மையையும் விட்டுப்பிரிய மனம் வாராமையால் அரசன் வேண்டுகோட்கிணங்கி இன்னும் சிலகாலம் மதுரையம்பதியில் இருக்க இசைந்தனர். ஆனாலும், அவரது சித்தம் யாவும் சீலமிக்க ஞானாசிரியரைக்காணவே சென்றது.

(தொடரும்)